பக்கங்கள்: 08

# காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 ஆடி 04 ஞாயிற்றுக்கிழமை 19.07.2020 கதிர் 123

# தேர்தலில் ராஜபக்ஷ அரசை படுகுழிக்குள் தள்ளுவோம்!

## அநுராதபுரத்தில் ரணில் அறைகூவல்



கொழும்பு, ஜூலை 19

**நாட்டின் பொருளாதாரத்தைப் படுகுழிக்குள் தள்ளிய ராஜபக்ஷ அரசையும் இந்தப் பொதுத்தேர்தலில் நாம் படுகுழிக்குள் தள்ளவேண்டும். அப்போதுதான் படுகுழிக்குள் தள்ளப்பட்டிருக்கும் பொருளாதாரத்தை நாம் இலகுவாக மீட்டெடுக்க முடியும்.**

**- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.** 2

# முன்னாள் எம்.பி கைது!

கொழும்பு, ஜூலை 19

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் ஆர்.பீரிஸை தலங்கம பொலிஸார் கைது செய்துள்ளனர்

113,460 ரூா பெறுமதியான தபால் கட்டண முறைகேடு விவகாரத்திலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடுவலை நீதிவான் நீதிமன்றம் பிறப்பித்த பிடியாணையைத் தொடர்ந்து சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

# புள்ளடியிட்ட வாக்குச்சீட்டை புகைப்படம் எடுத்த ஆசிரியர்

## மூதூர் பொலிஸாரால் வழக்கு

திருமலை, ஜூலை 19

புள்ளடியிடப்பட்ட தபால் மூல வாக்குச்சீட்டை தனது அலைபேசியில் புகைப்படம் எடுத்த, மூதூர் கல்வி வலயத்துக்குரிய பாடசாலையொன்றின் ஆசிரியருக்கு எதிராக நாளை மூதூர் நீதவான் நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளதென, மூதூர் 2

# உயர்தரம், புலமைப்பரிசில் பரீட்சை அறிவிப்பு நாளை

கொழும்பு, ஜூலை 19

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை மற்றும் ஐந்தாம் வகுப்பு மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பரீட்சை என்பவற்றுக்கான புதிய திகதிகள்நாளைஅறிவிக்கப்படவுள்ளன என கல்வி அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார். 2

# கொரோனா 2 ஆவது அலை ஏற்படும் இறுதி நிலையை நெருங்கியுள்ளோம்

## விசேட வைத்தியர்கள் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 19

இலங்கை கொரோனா வைரஸ் பரவலின் இரண்டாவது அலை ஏற்படும் இறுதி நிலையை அண்மித்துள்ளது என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த எச்சரிக்கையை விசேட வைத்தியர்கள் சங்கம் விடுத்துள்ளது.

நாட்டின் நிலைமை தொடர்பில் விசேட வைத்தியர் என்ற ரீதியில் வருத்தமடைகின்றார் என அச்சங்கத்தின் தலைவர் விசேட வைத்தியர் லஸந்த ரணசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்று ஏற்பட்டுள்ள நிலைமை எந்தத் திசையில் திரும்பும் என்ற 2

# வடமராட்சி மீனவர்கள் ஒரு வாரம் புறக்கணிப்பு

## சட்டவிரோத மீன்பிடித் தொழில் தடுக்கப்படாமையை கண்டித்து

யாழ்ப்பாணம், ஜூலை 19

கடலட்டை பிடித்தல் உள்ளிட்ட சட்டத்துக்கு புறம்பான மீன்பிடிக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளமை மற்றும் அவற்றைத் தடுக்க கடற்தொழில் அமைச்சர், அதிகாரிகள் தவறியமையைக் கண்டித்து வடமராட்சி 2

## கொரோனா தொற்றுக்குள்ளான

# இராணுவ உயர் அதிகாரியின் வீட்டை உடைத்துக் கொள்ளை

கொழும்பு, ஜூலை 19

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர் என உறுதிப்படுத்தப்பட்ட இராணுவ உயர் அதிகாரி ஒருவரின் வீட்டை உடைத்துக் கொள்ளையிடப்பட்ட சம்பவம் பதிவாகியுள்ளது. இந்தத் தகவலை எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ஜாலிய சேனாரத்னவும் உறுதிப்படுத்தியுள்ளார். 2

# மக்கள் ஒத்துழைப்பு வழங்கினால் மட்டுமே நாட்டிலிருந்து கொரோனாவை விரட்டலாம்

## சுகாதார அமைச்சர் வேண்டுகோள்

கொழும்பு, ஜூலை 19

மக்கள் எமக்கான ஒத்துழை ப்பை வழங்கினால் மட்டுமே கொரோனா தொற்றிலிருந்து நாம் மீண்டுவர முடியும்.

- இவ்வாறு சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

கொரோனா இன்று உலகளாவிய ரீதியான சவாலாக காணப்படுகிறது. எனினும், இதனை எம்மால் கட்டுப்படுத்த முடியும் என்று நாம் உறுதியாக நம்புகின்றோம் எனவும் அவர் குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது: - 2




காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## இராணுவ உயர் அதிகாரியின் ................

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கந்தக்காடு போதைப்பொருள் தடுப்பு புனர்வாழ்வு மத்திய நிலையத்தில் ஆலோசகராகக் கடமையாற்றி வந்த நிலையில், கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான குறித்த இராணுவ உயர் அதிகாரியின் தலவத்துர பிரதேசத்திலுள்ள வீடு, உடைக்கப்பட்டு அங்கிருந்த பெறுமதியான பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன தவுலகல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஜூன் மாதம் 19ஆம் திகதி விடுமுறையில் வீட்டுக்கு வந்துள்ள இவர், இந்த மாதம் 11ஆம் திகதி கொரோனாத் தொற்றுக்குள்ளானமை உறுதி செய்யப்பட்டதையடுத்து, இவரது மனைவி மற்றும் மகள்மார் இருவர், தாய் உள்ளிட்டவர்கள் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

இந்தநிலையிலேயே அவர்களின் வீடு உடைக்கப்பட்டு பெறுமதியான பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் 3 விசேட பொலிஸ் குழுக்கள் மற்றும் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் குழு ஆகியன இணைந்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றன என்று தவுலகல பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

## வடமராட்சி மீனவர்கள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கடற்தொழிலாளர் சமாசத்துக்கு உள்பட மீனவர்கள் தொழில் புறக்கணிப்புப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

இதன்மூலம் இன்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு ஆரம்பித்துள்ள இந்தப் போராட்டம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை நள்ளிரவு 12 மணி வரைநீடிக்கும்என்றுஅறிவித்துள்ளனர்.

வடமராட்சி கடற்தொழில் சமாசத்துக்கு உட்பட்ட மீனவர்கள் எவரும் கடற்தொழிலுக்கு செல்லமாட்டார்கள்.

வடமராட்சி கிழக்கு உள்ளிட்ட பகுதிகளில் கடலட்டை தொழில் மற்றும் தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைகளுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் அவற்றைத் தடுக்கக் கோரி கடற்தொழில் அமைச்சர் உள்ளிட்டோரிடம் வலியுறுத்தியும் நடவடிக்கை எடுக்கப்படாமையைக் கண்டித்தும் வடமராட்சி கடற்தொழிலாளர் சமாசத்துக்கு உட்பட்ட மீனவர்கள் இந்தத் தொழில் புறக்கணிப்புப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை, இந்தப் போராட்டத்துக்குவடக்குமாகாணகடற்தொழிலாளர்கள் அனைவரும் ஆதரவளிக்கவேண்டும்என்றுவடமராட்சிகடற்தொழிலாளர் சமாசத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## மக்கள் ஒத்துழைப்பு .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கந்தக்காடு போதைப்பொருள் தடுப்பு புனர்வாழ்வு மத்திய நிலையத்தில் கொரோனா தொற்றாளர்களை அடையாளம் காண்பதற்கான 700 பி.சி.ஆர். பரிசோதனைகள் இதுவரை செய்யப்பட்டுள்ளன.

இந்தப் பரிசோதனைகளின் அடிப்படையில் 443 கைதிகளும், 63 அதிகாரிகளும், அவர்களுடன் தொடர்பில் இருந்த 26 பேரும் வைரஸ் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். அதற்கமைய மொத்தமாக 530 பேர் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கடந்த இரண்டரை மாதங்களாக நாட்டில் எந்தவொரு கொரோனா தொற்றாளர்களும் அடையாளம் காணப்படாமைக்கு மக்களின் ஒத்துழைப்பு தான் பிரதான காரணமாகும். மக்களுக்கு நாம் மிகவும் கௌரவமளிக்கிறோம். நாம் கேட்டுக் கொண்டதற்கிணங்க அனைவரும் சுகாதார ஆலோசனைகளைக் கடைபிடித்தனர்.

இதனூடாகவே சமூகத் தொற்றாக இந்த வைரஸ் பரவல் காணப்படவில்லை. இப்போது கந்தக்காடு போதைப்பொருள் தடுப்பு புனர்வாழ்வு மத்திய நிலையத்தின் ஊடாக இந்த விடயத்தில் சற்று பின்னடைவொன்று ஏற்பட்டுள்ளது.

இவ்வேளையில் நாம் மக்களிடம் ஒன்றைக் கேட்டுக்கொள்ள விரும்புகின்றோம். அதாவது, கடந்த காலங்களில் எமக்கு எவ்வாறு ஒத்துழைப்பு வழங்கினீர்களோ அதேபோல் இனியும் செயற்பட்டு அரசுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம் - என்றார்.

## உயர்தரம், புலமைப் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொரோனா வைரஸ் பரவல் அச்சுறுத்தல் காரணமாக மார்ச் மாதம் முதல் கல்வி நடவடிக்கைகள் ஸ்தம்பிதம் அடைந்திருந்தன. இதனால் உயர்தரம் மற்றும் புலமைப் பரிசில் பரீட்சை என்பவற்றைஒத்திவைப்பதற்குகல்விஅமைச்சு ஏற்கனவே தீர்மானித்திருந்தது.

அதற்கமைய கடந்த ஜூன் மாதம் 9 ஆம் திகதி பாடசாலைகளை மீள ஆரம்பிப்பது குறித்தும் பரீட்சைகள் கல்வி அமைச்சினால் அறிவிக்கப்பட்டது. இதன்போது க.பொ.த உயர்தரப்பரீட்சைகளை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 7 ஆம் திகதி ஆரம்பிப்பதற்கும் ஐந்தாம்தரப் புலமைப்பரிசில் பரீட்சையினை செப்ரெம்பர் 13 ஆம் திகதி நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

எனினும் உயர்தர மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் வேண்டுகோளுக்கமைய உயர்தர பரீட்சைகளை ஆரம்பிப்பதற்காக தினம் குறித்து ஆராய்வதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்தது.

இந்நிலையில்கந்தக்காடுபுனர்வாழ்வு நிலையத்தில் கொரோனா வைரஸ் பரவலால் ஏற்பட்ட சுமுகமற்ற நிலைமையைக் கருத்திற் கொண்டு மீண்டும் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் நேற்று சனிக்கிழமை கல்வி அமைச்சின் அதிகாரிகளுக்கும் சுகதாரத்துறையினருக்கும் இடம்பெற்ற பரந்துபட்ட கலந்துரையாடலில் பாடசாலைகளுக்கு மேலும் ஒரு வார காலம் விடுமுறை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதோடு நாளை உயர்தரம் மற்றும் புலமைப்பரிசில் பரீட்சைகளுக்கான புதிய தினங்களை அறிவிக்கத் தீர்மானிக்கப்பட்டது.

## புள்ளடியிட்ட ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த மாதம் 15ஆம் திகதி தபால்மூல வாக்களிப்புக்காக மூதூர் கல்வி வலய அலுவலகத்துக்கு வருகை தந்த ஆசிரியர், வாக்களிப்பின் பின்னர் அச்சீட்டைப் புகைப்படம் எடுத்துள்ளார். இதனையடுத்து அவரின் அலைபேசியைத் தேர்தல் அதிகாரிகள் பொறுப்பேற்று, மேலதிக விசாரணைகளுக்காக மூதூர் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

தனது மகன் வாக்களிப்பு என்றால் என்ன என்பது குறித்து, விசாரிப்பதால் அவருக்கு விளக்கமளிப்பதற்காகவே வாக்குச்சீட்டை புகைப்படம் எடுத்துள்ளதாக அந்த ஆசிரியர் அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளார். எனினும் வாக்குச் சீட்டை வைத்திருத்தல், அதனைப் புகைப்படம் எடுத்தல் என்பன 1981 இலக்கம் 1 என்ற நாடாளுமன்றத் தேர்தல் விசாரணைச் சட்டத்தின் 66 இன் உறுப்புரைக்கமைய தண்டனைக்குரிய குற்றமென கிழக்கு மாகாண உதவித் தேர்தல் ஆணையாளர் எஸ். சுதாகரன் தெரிவித்துள்ளார்.

## கொரோனா 2 ஆவது ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சந்தேகம் ஏற்பட்டுள்ளது. கொரோனாவின் ஆரம்ப காலப்பகுதியில் இலங்கை முகம் கொடுத்த முறை மிகவும் சிறப்பானதாகும். அது குறித்து திருப்தி அடைய முடியும். அரசின் உயர் அதிகாரிகளிடம் இருந்துகிடைக்கும்தவறானவிழிப்புணர்வு காரணமாக மக்கள் குழப்பமடைந்துள்ளனர். கொரோனா வைரஸ் மீண்டும் சமூகத்துக்குள் பரவியுள்ளமை நூற்றுக்கு நூறுவீதம்கூறமுடியாது. எனினும், அதற்கு அருகில் நெருங்கியுள்ளோம் - என்றார்.

# எவருக்கும் அடிபணியோம்; சுதந்திரமான தேர்தல் உறுதி

## எதிரணிகளின் குற்றச்சாட்டுக்களுக்கு தேர்தல் ஆணைக்குழு தலைவர் பதிலடி



எவருக்கும் அடிபணிய வேண்டிய அவசியம் எமக்கில்லை. திட்டமிட்டபடி எதிர்வரும் ஓகஸ்ட் 5ஆம் திகதி நாடாளுமன்றத் தேர்தல் சுதந்திரமாக - நீதியாக நடைபெற்றே தீரும்.

- இவ்வாறு தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

எதிரணிகளின் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் பதிலளிக்கும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேர்தல்கள் ஆணைக்குழு சுயாதீனக் குழுவே. எனவே, நாம் சுதந்திரமாகவே இயங்குகின்றோம். எவருக்கும் அடிபணியவேண்டிய அவசியம் எமக்கில்லை. அரசுக்குச் சார்பாகச் செயற்பட வேண்டிய கட்டாயமும் எமக்கில்லை. எதிரணிகள் அரசை விமர்சிப்பதுபோல் எம்மையும் கண்டபடி விமர்கின்றார்கள். அது தொடர்பில் நாம் அலட்டிக்கொள்ள மாட்டோம்.

நாட்டின் தற்போதைய நிலைமையின் பிரகாரம் திட்டமிட்டபடி எதிர்வரும் ஓகஸ்ட் 5ஆம் திகதி நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றே தீரும். தேர்தலை ஒத்திவைக்க வேண்டிய தேவை தற்போது ஏற்படவில்லை. சுகாதாரப் பாதுகாப்புடன் சுதந்திரமாக - நீதியாக தேர்தல் நடைபெறும் என்பதை உறுதியளிக்கின்றேன். தேர்தல் நடவடிக்கைகளில் இராணுவத்தினரின் தலையீடு எதுவும் இருக்கவேமாட்டாது என்பதை மீண்டும் மீண்டும் தெரிவித்துக்கொள்கின்றேன் - என்றார்.

## தேர்தலில் ராஜபக்ஷ அரசை ......................

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அநுராதபுரத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொதுத்தேர்தல் என்பது ஒரு நாட்டின் அரசைத் தெரிவு செய்வதற்கான தேர்தலாகும். அவ்வாறெனில் அதில் போட்டியிடுகின்ற கட்சிகள் தமது கொள்கைகளைப் பொதுமக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும். எனினும், இம்முறை பொதுத்தேர்தலுக்கான கொள்கைப் பிரகடனத்தை எமது கட்சியே முதலில் வெளியிட்டிருக்கின்றது.

அதேவேளை, சுயதேவைப்பூர்த்தியை அடைந்த நாட்டை உருவாக்குவோம் என்று ஆளுந்தரப்பு கூறிவருகின்றது. ஏற்கனவே எமது நாடு பல்வேறு உணவுப்பொருள் உற்பத்திகளிலும் சுயதேவைப்பூர்த்தி அடைந்த நாடாகவே இருக்கின்றது. ஆனால், அதனால் மாத்திரம் மக்களின் ஏனைய அனைத்துப் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கும் தீர்வை வழங்கிவிட முடியுமா? எனவேதான் மக்களின் பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுப்பதற்கான திட்டங்களையும் எமது கொள்கைப் பிரகடனத்தில் உள்ளடக்கியிருக்கும் அதேவேளை, எதிர்வரும் 2050 ஆம் ஆண்டளவில் சுமார் 500 மில்லியனால் அதிகரிக்கப்போகும் இந்து சமுத்திரப் பிராந்திய நாடுகளின் சனத்தொகைக்கு உணவை வழங்கக்கூடிய வகையில் தூரநோக்குடனான உற்பத்தியை ஊக்குவிப்பதற்கும் திட்டமிட்டிருக்கின்றோம்.

அதற்கேற்றவாறு உணவு உற்பத்தியில் ஈடுபடுபவர்களுக்கான காணிகளைப் பெற்றுக்கொடுத்தல், ஏனைய ஆரம்பகட்ட வசதிகள் மற்றும் ஒத்துழைப்புக்களை வழங்கல், நாடளாவிய ரீதியில் பெருமளவான களஞ்சியசாலைகளை நிறுவுதல் போன்றவற்றைப் பொதுத்தேர்தலின் ஊடாக நாம் ஆட்சியமைக்கும் பட்சத்தில் செய்வதற்கு எதிர்பார்த்திருக்கிறோம். அதுமாத்திரமன்றி அடுத்த வருடத்திலிருந்து நாட்டுக்கு சுற்றுலாப்பயணிகளை வரவழைப்பதற்கான விசேட திட்டமொன்றையும் செயற்படுத்வும் இருக்கின்றோம்.

வரலாற்றைப் பொறுத்தவரை எமது நாட்டை வேறு கட்சிகள் படுகுழிக்குள் தள்ளியபோதெல்லாம் ஐக்கிய தேசியக் கட்சியே நாட்டையும், பொருளாதாரத்தையும் மீட்டெடுத்து வந்திருக்கின்றது. அதற்கேற்பவே இம்முறையும் எம்மைக் கட்டுப்படுத்திக் கொண்டிருக்கும் கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்தி, படுகுழிக்குள் தள்ளப்பட்டிருக்கும் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கான செயற்றிட்டத்தை முன்வைத்திருக்கின்றோம்.

எனவே, நாட்டின் எதிர்காலத்தைக் கருத்தில்கொண்டு மக்களும் சிந்தித்து வாக்களிக்க வேண்டும். நாட்டின் பொருளாதாரத்தைப் படுகுழிக்குள் தள்ளிய ராஜபக்ஷ அரசையும் இந்தப் பொதுத் தேர்தலில் நாம் படுகுழிக்குள் தள்ள வேண்டும். அப்போதுதான் படுகுழிக்குள் தள்ளப்பட்டிருக்கும் பொருளாதாரத்தை நாம் இலகுவாக மீட்டெடுக்க முடியும் - என்றார்.

காலைக்கதிர்
Kalaikkathir

பத்திரிகைத்துறை வெற்றிடங்கள்

☛ உதவி ஆசிரியர்
☛ ஒப்பு நோக்கர்கள்

முன் அனுபவம் உள்ளவர்களுக்கு
முக்கியத்துவம் வழங்கப்படும்

தொடர்புகளுக்கு -
காலைக்கதிர்
இல - 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
076 443 8622

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் -kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஆக்கிரமிக்கப்படும் தமிழர் தேசம்

**தமிழர் தாயகம் இராணுவப் பிடிக்குள் சிக்கப் போகின்றது என்று எச்சரித்திருக்கின்றார் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன்.**

**தேர்தல் பரப்புரை மும்முரத்தில், அந்தக் கூட்டம் ஒன்றில்தான் இந்தக் குண்டைத் தூக்கிப் போட்டிருக்கின்றார் நீதியரசர்.**

**தேர்தலுக்கான பிரசாரக் குண்டு என இதனைச் சிலர் அர்த்தம் கற்பிக்கலாம். அத்தகைய நோக்கத்துடன் கூட இந்த விடயத்தை நீதியரசர் அம்பலப்படுத்தியிருக்கலாம்.**

**ஆனால் யதார்த்தப் புறநிலைமை அதுதான். களநிலைமை - மெய்மையான தகவல் - அதனைத்தான் எச்சரிக்கையுடன் எடுத்துரைக்கின்றன என்பதை நாம் மறந்து விடக் கூடாது; மறந்து விட முடியாது.**

**'அடையாளம்' என்ற நிறுவனம் ஓரிரு ஆண்டுகளுக்கு முன்னர் எடுத்த ஆய்வுக் கணக்கெடுப்பின்படி முல்லைத் தீவில் நிறுத்தப்பட்டிருக்கும் படையினரின் எண்ணிக்கை அறுபதாயிரம். இதன்படி முல்லைத் தீவில் சாதாரணமாக இரண்டு பொது மக்களுக்கு ஒரு சிப்பாய் என்ற ரீதியில் இராணுவப் பிரசன்னம் உள்ளது.**

**உலகத்தில் மிக வெகுவாக இராணுவமயப்படுத்தப்பட்ட பிரதேசங்களில் முல்லைத்தீவும் ஒன்று எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.**

**முழு நாடுமே மெல்ல மெல்ல இராணுவ மயமாகிக் கொண்டிருக்கின்றது.**

**நாடு இராணுவ மயப் பிடிக்குள் சிக்கும் அவல நிலை ஏற்பட்டு வருகின்றது என்று இப் பத்தியில் ஏற்கனவே பல தடவைகள் சுட்டிக்காட்டியாகி விட்டது.**

**தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் இந்த விடயம் எச்சரிக்கை அலாரத்தை எழுப்பியிருக்கின்றது என்பதும் அவதானிக்கப்பட்டுள்ளது.**

**ஆனால், முன்னாள் இராணுவ அதிகாரியான ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகளை வைத்தே நாட்டை ஆட்சி செய்யும் - நாட்டின் மீது அதிகாரத்தைச் செலுத்தும் - தனது கைங்கரியத்தைத் தீவிரமாகத் தொடர்ந்து வருகின்றார்.**

**இதன் விளைவு எதிர்காலத்தில் நாட்டை மீள முடியாத பேராபத்தில் ஆழ்த்தப் போகின்றது என்பது தெளிவு.**

**இந்த இராணுவ ஆக்கிரமிப்பு நீதியரசர் விக்னேஸ்வரன் சுட்டிக் காட்டுவது போல வடக்கு, கிழக்குக்கு வெளியே - தெற்கில் - வேறு நோக்குடனும், இலக்குடனும் கட்டவிழ்க்கப்படுகின்றது.**

**அதுவே, வடக்கு, கிழக்கில் பிறிதான, தனியான, வேறு ஒரு நிகழ்ச்சித் திட்டத்துடன் முன்னெடுக்கப்படுகின்றது.**

**நீதியரசர் விக்னேஸ்வரன் சுட்டிக் காட்டுகின்றமை போன்று -**

**நிர்வாகச் சீர்திருத்தம், ஊழலை ஒழித்தல், பொருளாதார மேம்பாடு, பௌத்த சமய வலுவாக்கல் ஆகியவற்றின் பெயராலும், தமது சர்வாதிகாரப் பிடியை இறுக்குவதற்காகவும் தென்னிலங்கையில் இராணுவ மயப்படுத்தல் முன்னெடுக்கப்படலாம்.**

**ஆனால் தமிழர் தாயகத்தில் அதன் இலக்கும், நோக்கும், போக்கும் வேறானவை என்பது உறுதி.**

**தமிழர் தாயகத்தில் தமிழர்களின் இருப்புக்கு அடிப்படையான கட்டமைப்புகளைச் சிதறடித்து, நிலங்களைக் கபளீகரம் செய்து, அப் பிரதேசங்களை வல்வந்தமாக சிங்கள, பௌத்த மயமாக்குவதற்காகவே இராணுவ மயமாக்கல் இங்கு கட்டவிழ்கின்றது என்பது மிகத் தெளிவான விவகாரமாகும்.**

**ஏற்கனவே யுத்தத்தினால் பல லட்சம் தமிழர்கள் தமது தாயகத்திலிருந்து வெளி நாடுகளுக்கும், வெளியிடங்களுக்கும் புலம்பெயர்ந்திருக்கின்றமையால் தமிழர் தாயகம் பெரிதும் நலிவுற்றிருக்கின்றது.**

**இந்தச் சந்தரப்பத்தைப் பயன்படுத்தி தமிழர் தாயகத்தை சூறையாடிக் கைப்பற்றி ஏப்பமிடும் கபடத் திட்டம் இப்போது அரச மேல் மட்டத்தினால் கனகச்சிதமாக - மிகுந்த மதி நுட்பத்துடன் - முன்னெடுக்கப்படுகின்றமை தொடர்பிலேயே அபாயச் சங்கு ஊதியிருக்கின்றார் நீதியரசர் சி.வீ. விக்னேஸ்வரன்.**

**இப்போதைய தேர்தலின் முடிவு, இந்த இராணுவ மயப்படுத்தலை மேலும் தீவிரமாகவும், முனைப்புடனும் முன்கொண்டு செல்வதற்கான முழு உரிமையையும், வாய்ப்பையும், அங்கீகாரத்தையும் ராஜபக்ஷக்களுக்கு உறுதியாக வழங்கும் விதத்திலேயே அமையும் என்பதும் திண்ணம்.**

**அதே சமயம், தமிழர் தேசத்திலும் வாக்குகள் சிதறி, பல தரப்புகளாகப் பிரிந்து நிற்கும் தமிழ்க் கட்சிகள் இடையே பிரதிநிதித்துவமும் பிளவுண்டு போக, அது தென்னிலங்கை பௌத்த, சிங்களப் பேரினவாதத்தின் மேலாண்மை ஆக்கிரமிப்புக் கொடூரத்துக்கு மேலும் துணை போவதாக அமைந்து விடும் என்பதுதான் தமிழர்களின் துரதிஷ்டமாகும்.**

# சம்பந்தனை விலை பேசி வாங்கமுடியாது அதனால் கூட்டமைப்பை சிதைக்க முயற்சி

## ஜனநாயகப் போராளிகள் கட்சி கூறுகிறது

மட்டக்களப்பு, ஜூலை19

இன்றும் சம்பந்தன் ஐயாவை விலைபேசி வாங்க முடியாத ஒரு சூழ்நிலையின் காரணமாகத்தான் கூட்டமைப்பை ஒவ்வொரு துண்டுகளாக இன்று சிங்கள தேசம் உடைத்துக் கொண்டிருக்கின்றது. இதனைப் பலப்படுத்துவது எமது பாரிய கடமையாகும் என ஜனநாயகப் போராளிகள் கட்சியின் ஊடகப் பேச்சாளர் க.துளசி தெரிவித்தார்

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடியில் நேற்று இடம்பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரதிநிதிகள் மற்றும் ஜனநாயகப் போராளிகள் கட்சியின் பிரதிநிதிகள் இணைந்து நடத்திய ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

சிங்கள மக்களுக்கும் தமிழர்களுக்கும் எவ்வித பிரச்சினைகளும் இல்லை. சிங்கள ஆட்சியாளர்கள் தங்கள் ஆட்சியைத் தீர்மானிப்பதற்காகவும், அதனைத் தொடர்ந்து தக்க வைப்பதற்காகவுமே தமிழர்களுக்கு எதிரான இனப்பிரச்சினை ஆரம்பிக்கப்பட்டது. சிங்கள இனவாதிகளால் தமிழ் மக்களுக்கு எதிராக ஏற்படுத்தப்பட்ட இராணுவ அடக்குமுறைகளுக்கு எதிராக வடக்கு – கிழக்கில் உள்ள ஒட்டுமொத்தத் தமிழர்களும் செயலாற்றினார்கள்.

இப்படிப்பட்ட ஒரு போராட்டத்தின் பின்புலத்தில் இருந்து வந்திருக்கின்ற எமது தமிழ் இனம் வெறுமனே அபிவிருத்திக்கும், சலுகைகளுக்காவும் விலைபோய் விட முடியாது. தெற்கில் விலைவாசி குறைத்தால் வாக்களிக்கப்படும். ஆனால் வடக்கு – கிழக்கில் அறிவிக்கப்படுகின்ற எந்தச் சலுகைகளுக்குப் பின்னாலும் தமிழர்கள் செல்ல மாட்டார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் போராளிகள் தாங்கி நிற்பதற்கான காரணம் ஒன்றுதான். இன்றும் சம்பந்தன் ஐயாவை விலைபேசி வாங்க முடியாத ஒரு சூழ்நிலையின் காரணமாகத் தான் கூட்டமைப்பை ஒவ்வொரு துண்டுகளாக இன்று சிங்கள தேசம் உடைத்துக் கொண்டிருக்கின்றது. இதனைப் பலப்படுத்துவது எமது பாரிய கடமையாகும்.

கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களை விலைபேசி வாங்க முடியாமலும், அவர்களைத் தேசியவாதத்தில் இருந்து பிரிக்க முடியாமல் இருந்த நிலையில் கடந்த தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடாக உருவாக்கப்பட்ட ஒரே ஒரு மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாத்திமே பேரம் பேசலினூடாகப் பணம் கொடுத்து வாங்கப்பட்டார். அந்தப் பலவீனமான மனிதர் தற்போது தன்னை ஒரு பலமானவராகக் காட்டிக் கொண்டு மீண்டும் இந்தத் தேர்தல் மேடைக்கு வந்திருக்கின்றார்.

நாங்கள் ஒன்றை மட்டும் சொல்கின்றோம். அபிவிருத்திதான் தேவை, வேலைவாய்ப்புதான் தேவை என்றால் நேரடியாகச் சிங்களவர்களுக்கே வாக்களித்து விடுங்கள். ஆனால் ஒன்றை மட்டும் மறக்கவேண்டாம். காணி தந்து, வீடு தந்து அதில் என்ன செய்தாலும் அக்காணிக்கு உறுதி பெறப்படாத வரைக்கும் எப்போது வேண்டுமானலும் நீங்கள் வீதிக்கு வர நேரிடும். இது தான் உரிமை தொடர்பில் உள்ள விளக்கம். உரிமை தொடர்பிலான ஆரம்பக் கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்படாமல் ஏற்படுகின்ற அபிவிருத்தியும் இவ்வாறு தான் நிலையில்லாமல் இருக்கும்.

முஸ்லிம் அரசியல்வாதிகள் அரசுடன் இணைந்து செயற்பட்டார்கள். தங்கள் பிரதேசங்களை அபிவிருத்தி செய்தார்கள் என்றெல்லாம் சொல்கின்றார்கள். ஆனால், ஹிஸ்புல்லா கட்டிய பல்கலைக் கழகத்திற்கு நடந்த நிலைமையை அனைவரும் சிந்தித்துப் பார்த்தால் உள்ள நிலைமை விளங்கும்.

ஒரே நாட்டுக்குள் அதிகாரப் பகிர்வையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரி நிற்கின்றது. எதிர்காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருக்கும் ஒவ்வொரு கல்லையும் பிடுங்கி எடுப்பதற்கு பேரினவாதம் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கின்றது. இந்த விடுதலைப் போராட்டத்துக்கு வடக்கு எந்தளவுக்கு அர்ப்பணிப்பைச் செய்துள்ளதோ அதற்கு ஒருபோதும் சளைக்காத அளவில் கிழக்கும் இந்தப் போராட்டத்துக்கு அர்ப்பணிப்பைச் செய்துள்ளது – என்றார்.

# 100 போதை மாத்திரைகளுடன் இளைஞர் திருமலையில் கைது



(ஹஸ்பர் ஏ ஹலீம்)

திருகோணமலை தலைமையக பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட கணேஷ் லேன் பிரதேசத்தில் நேற்று மாலை 100 போதை மாத்திரைகளுடன் 19 வயது இளைஞரைத் தாம் கைது செய்துள்ளனர் எனத் துறைமுகப்பொலிஸ் பொறுப்பதிகாரி ஏ.எம்.ஏ.எஸ்.ஹேரத் தெரிவித்தார்.

துறைமுகப்பொலிஸாருக்கு கிடைத்த புலனாய்வு தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவலைப்பின் போது மாத்திரைகளை விற்பனை செய்யும் நோக்கில் கொண்டு சென்ற ஓர் இளைஞன் கைது செய்யப்பட்டார் என துறைமுகப் பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் நீண்டகாலமாக போதை பொருள்களை விற்பதுடன் பாவனையாளருமாக இருந்து வந்துள்ளார் என விசாரணையில் தெரிவந்துள்ளது.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் ஜமாலியா வீதி,பாலையூற்று பிரதேசத்தில் வசிப்பவர் எனவும் கைதுசெய்யப்பட்ட நபரை கைப்பற்றப்பட்ட போதை மாத்திரைகளுடன் பதில் நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர் எனவும் துறைமுகப்பொலிஸ் பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்தார்

# சுகாதார அமைச்சரின் கருத்தை ஆட்சேபித்து சுகாதாரப் பரிசோதகர்கள் பணிப் பகிஷ்கரிப்பு!

சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னி ஆராச்சியினால் வெளியிடப்பட்ட கருத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து சுகாதார பரிசோதகர்கள் பணி பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இதனால் கொரோனா தொற்றுக்குள்ளான நபர்களை அடையாளம் காணுவதற்காக மேற்கொள்ளப்படும் பி.சீ.ஆர். பரிசோதனைகள் தடைப்பட்டுள்ளன எனத் தகவல் வெளியாகியுள்ளது.

கொழும்பு நகர சபை எல்லையில் பரவலாக தெரிவு செய்யப்படும் நபர்களிடம் பி.சீ.ஆர். பரிசோதனை மேற்கொள்ள முடியாத நிலைமை தற்போது ஏற்பட்டுள்ளதாக கொழும்பு நகர சபையின் பிரதான வைத்திய அதிகாரி, வைத்தியர் ருவன் விஜயமுனி தெரிவித்துள்ளார்.

இதனால் வட கொழும்பு பிரதேசத்தில் இடம்பெறவிருந்த பரிசோதனைகளைப் பிற்போட நேரிட்டுள்ளாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாளை சுகாதார பரிசோதகர்களின் தொழிற்சங்க நடவடிக்கையை முடிவுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.


நாளை திங்கட்கிழமை முதல் பி.சீ.ஆர். பரிசோத னைகளை ஆரம்பிக்க முடியும் என நம்புவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# இராணுவப் பிடிக்குள் சிக்கப் போகின்றது தமிழர் தாயகம்!

## எச்சரிக்கின்றார் நீதியரசர் விக்னேஸ்வரன்



தமிழர் தாயகம் இராணுவப்பிடிக்குள் சிக்கப் போகின்றது என எச்சரிக்கை செய்திருக்கின்றார் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்.

நேற்று கிளிநொச்சில் நடந்த தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் கூறியவை வருமாறு:-

மக்கள் மீது அன்பும் கரிசனையும் கொண்டவர்கள், ஊழலற்ற - வெளிப்படையான - செயற்பாடுகளை வெளிக்கட்டுபவர்கள், மக்கள் யாவரையும் ஒரே கண்ணோட்டத்தில் பார்த்து மனிதாபிமான சேவை ஆற்றக் கூடிய மனோபாவம் உடையவர்கள் என்று சகலவிதமான நற்குணாதிசயங்களையுங் கொண்ட பிரதிநிதிகளையே நீங்கள் யாவரும் சேர்ந்து தேர்ந்தெடுக்க வேண்டும்.

முன்னர் இருந்த பிரதிநிதிகள் தப்புக்கள் செய்திருந்தால் மீண்டும் அவர்களைப் நாடாளுமன்றம் அனுப்ப வேண்டும் என்ற கடப்பாடு எவையும் உங்களுக்கில்லை என்பதை மறவாதீர்கள். எம்மைப் போன்ற ஒரு புதிய கட்சியின் வேட்பாளர்களுக்கு இம்முறை ஒரு சந்தர்ப்பம் அளிப்பதில் தவறில்லை.

ஏற்கனவே உங்களில் பலருக்கு நாம் வடக்கு மாகாண சபையில் இருந்த போது பல சேவைகளை ஆற்றிக் கொடுத்துள்ளோம். அந்த நற்செயற்பாடுகளை நாம் உங்களுக்குத் தொடர்ந்தளிக்க உங்கள் வாக்குகள் எமக்கு மிகவும் அவசியம்.

முன்னர் உங்களை முதலமைச்சராகச் சந்தித்த நான் இப்பொழுது எமது கட்சியின் வேட்பாளராகச் சந்திக்கின்றேன்.

நான் உங்கள் மத்திக்கு ஒரு சில முக்கிய விடயங்களைக் கொண்டு வரக் கடமைப்பட்டுள்ளேன். உங்களின் ஊடாக எமது தமிழ்ப் பேசும் மக்கள் அனைவருக்கும் இந்தச் செய்தி பரவ வேண்டும் என்று எண்ணுகின்றேன்.

நாளுக்கு நாள் எம் மத்தியில் படையினர் தொகை அதிகரித்து வருகின்றது. எமது ஜனாதிபதி ஒரு முன்னைய இராணுவ வீரர். எனவே வருங் காலம் எப்படி அமையும் என்பதில் பலத்த கரிசனை பலர் மத்தியில் இப்பொழுது எழுந்துள்ளது. இம்முறை நடத்தவிருக்கும் தேர்தல் சரியாக, முறையாக, ஜன நாயக முறைப்படி நடத்தப்படுமா என்ற கேள்வி எழுந்துள்ளது. காரணம் கொரோனாவைச் சாட்டி இராணுவ பிரசன்னம் தற்போது அளவுக்கதிகமாக வட மாகாணத்தில் ஏற்பட வழி அமைத்திருப்பதேயாகும்.

2019 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் வெளியிடப்பட்ட போர்சார்ந்த சமநிலை என்ற சர்வதேச போர் முறைத் திறன் ஆராய்வு நிறுவனத்தின் அறிக்கைப் படி இலங்கையானது 2,55,000 செயலூக்க அங்கத்தவர்களைக் கொண்டிருந்தது என்றும் அதே காலகட்டத்தில் பிரித்தானியா 1,46,390 அங்கத்தவரையும், இஸ்ரேல் 1,68,550 அங்கத்தவரையும், பிரான்ஸ் 2,03,910 அங்கத்தவரையும், சவூதி அரேபியா 2,27,000 செயலூக்க அங்கத்தவர்களையுங் கொண்டிருந்தன என்றும் கூறுப்பட்டுள்ளது. எனவே எமது சிறிய நாடு எந்தளவுக்கு படை பலம் பெற்றுள்ளது என்று காணக் கூடியதாக உள்ளது.

> “இன அழிப்பு என்பது தமிழ் மக்களைக் கொல்வது மட்டும் அல்ல. கலாசார இனவழிப்பு, கல்விசார் இன அழிப்பு, பொருளாதார இன அழிப்பு, கட்டமைப்புகளின் இன அழிப்பென்று பல இன அழிப்புக்கள் உண்டு. இவ்வாறான பல வித இன அழிப்பு நடவடிக்கைகள் வடகிழக்கு மாகாணங்களில் தொடர்ந்து நடந்து கொண்டிருப்பதை அறிஞர்கள் பலர் வெளிக்காட்டியுள்ளார்கள்.”

கொள்கை ஆராய்வு நிறுவனமான யாழ்ப்பாணத்தின் அடையாளம் என்ற நிறுவனம் 2017 ஒக்டோபர் மாதத்தில் முல்லைத்தீவில் நிறுத்தப்பட்டிருக்கும் இராணுவ வீரர்களின் தொகை 60,000 என்றும், இது முல்லைத்தீவில் 2 சாதாரண மக்களுக்கு ஒரு படைவீரர் என்ற விகிதத்தில் அமைகின்றது என்றும் உலகத்தில் வெகுவாக இராணுவ மயப்படுத்தப்பட்ட பிரதேசங்களில் முல்லைத்தீவும் ஒன்று என்று கூறியது.

கனடாவில் இருந்து வருகை தந்த John Tory என்ற நகரபிதா என்னுடன் முள்ளிவாய்க்கால் நோக்கிப் பயணம் செய்து வந்த போது முல்லைத்தீவில் காணுமிடமெல்லாம் இராணுவ முகாம்கள் அமைந்துள்ளமையைப் பார்த்து இங்கு யுத்தம் முடிவடையவில்லையா என்று கேட்டார். அப்போது போரின் பின் 9 வருடங்கள் கழிந்த நிலையில் ஏன் இவ்வளவு படைமுகாம்கள் என்ற கேள்வியை அவர் முன்வைத்தார்கள். அந்த நிலை மாறவில்லை. மாறாக இன்னமும் விரிவடைந்து வருவதை நாம் இன்று பார்க்கின்றோம். உண்மையில் 60,000 போர் வீரர்கள் அக்காலகட்டத்தில் முல்லைத்தீவில் நிலை கொண்டிருந்தார்கள் என்று கூறினாலும் இத் தொகை இராணுவப் பிரசன்னத் தொகையே என்றும் இலங்கை கடற்படை, ஆகாயப் படையினர் பற்றிய தக்க தகவல்கள் கிடையாமையால் படையினர் தொகை 60,000 ஐயும் மிஞ்சியிருந்தது என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டிருந்தது. போர் இல்லாத ஒரு பிரதேசத்தில் இந்தளவு படையினர் பிரசன்னத்திற்குக் காரணம் என்ன என்ற கேள்வி எழுகின்றது.

பல சர்வதேச நிறுவனங்கள், ஐக்கிய நாடுகள் போன்றவை இலங்கையில் போரின் பின்னர் படைக் குறைப்பை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்ட பின்னரும் இலங்கை செவி சாய்க்காது இருப்பது ஏன்?

இவ்வாறான செயல்கள் மூலம் தமிழ் மக்களின் கோபத்தைத் தூண்டிவிட்டு அவர்களை எதிர் வினையில் ஈடுபடவைத்து அதைச் சாட்டாக வைத்து தமிழர்களை நிர்மூலமாக்கும் திட்டம் எதுவும் உள்ளதா என்று கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

எவ்வளவு தான் படையினர் உங்களுக்கு நன்மைகள் செய்கிறார்கள் எனப் பாசாங்கு காட்டினாலும் அவர்கள் ஒரு அடிப்படைத் திட்டத்தின் அடிப்படையிலேயே வன்னியில் நிலைபெற்றுள்ளார்கள் என்பதை நாம் மறத்தல் ஆகாது. பல இளம் சகோதர, சகோதரிகள் வறுமையின் நிமித்தம் இவர்களின் பிடிக்குள் அகப்பட்டுள்ளார்கள் என்பதை அவர்களே தெரிந்து கொள்ளாதிருக்கின்றார்கள். அவர்களுக்கு ஒரு மாற்று வாழ்வாதாரத்தை நாம் வழங்க முன்வர வேண்டும்.

இதுபற்றி கூட்டமைப்பினர் எந்தவித கரிசனையையும் இதுவரை காட்டாதமை மனதுக்கு வருத்தமாக உள்ளது. இன அழிப்பு என்பது தமிழ் மக்களைக் கொல்வது மட்டும் அல்ல. கலாசார இனவழிப்பு, கல்விசார் இன அழிப்பு, பொருளாதார இன அழிப்பு, கட்டமைப்புக்களின் இன அழிப்பென்று பல இன அழிப்புக்கள் உண்டு. இவ்வாறான பல வித இன அழிப்பு நடவடிக்கைகள் வடகிழக்கு மாகாணங்களில் தொடர்ந்து நடந்து கொண்டிருப்பதை அறிஞர்கள் பலர் வெளிக்காட்டியுள்ளார்கள்.

எம்மைக் கண்காணிக்கும் படையினரில் 99 சதவிகிதமானவர்கள் பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்தவர்கள். எம்முடன் பழகும் பொலிஸாரில் 95 சதவிகிதமானவர்கள் அதே பெரும்பான்மையினர். இதன் அர்த்தமென்ன? பெரும்பான்மையினருக்கு எம்மிடையே எதையும் நிகழ்த்த, எதையும் செய்ய, எதைச் செய்தாலும் அதற்கான பொறுப்புக் கூறலில் இருந்து அவர்களை விடுபடச் செய்ய சட்டப்படி அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஆகவே நாடெங்கும் இராணுவ சர்வாதிகாரம் வரப் போகின்றதென்று பெரும்பான்மையினர் அச்சம் கொண்டுள்ள நேரத்தில் வடக்குக் கிழக்கில் அது ஏற்கனவே நடைமுறையில் உள்ளது என்பதே உண்மை. பலருக்கு இது விளங்கவில்லை.

இராணுவ சர்வாதிகாரம் வடக்குக் கிழக்கில் ஏற்படுத்தப் படப்போவது மற்றைய மாகாணங்களில் ஏற்படுத்தப் போகும் அதே காரணங்களுக்கு அன்று.

மற்றைய ஏழு மாகாணங்களிலும் நிர்வாக சீர்திருத்தத்துக்காகவும் ஊழலை ஒழிக்கவும், பொருளாதார மேம்பாட்டுக்காகவும், பௌத்த சமய வலுவாக்கலுக்காகவும் சர்வாதிகாரம் பயன்படுத்தப்படலாம்.

ஆனால் வடக்கு கிழக்கில் பின்வரும் காரணங்களுக்காகவே சர்வாதிகாரம் பயன்படுத்தப்படலாம் என்று கொள்ள இடமிருக்கின்றது.

1. தமிழர் காணிகளைக் கபளீகரம் செய்வதற்கு.
2. அந்தக் காணிகளில் சிங்களமயமாக்கலை நடைமுறைப்படுத்துவதற்கு.
3. ஆனால் அந்த சிங்கள மயமாக்குதலுக்கு பாவிக்கப் போகும் அவர்களின் யுக்தி பௌத்த மயமாக்கலாகும். தமிழரின் பௌத்தகாலத்து தொல்லியல் எச்சங்களை பௌத்த, சிங்கள எச்சங்களாகக் காட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. கிழக்கு மாகாண ஜனாதிபதி செயலணி அதற்காகவே நியமிக்கப்பட்டுளது.

இவ்வாறு செய்தால் என்ன நடக்கும்?

1. பிறநாடுகளுக்குத் தமிழர்கள் வெளியேறிச் செல்லலாம். அல்லது நாட்டின் மற்றைய பிரதேசங்களுக்குச் சென்று குடியேறலாம்.
2. தொடர்ந்திருந்து இராணுவ ஆட்சியின் கீழ் இரண்டாந் தர 3 ஆம் தரப் பிரஜைகளாக வாழலாம்.
3. எதிர்த்து சிறைகளில் அடைபடலாம். அல்லது தடை முகாம்களில் காலத்தைக் கழிக்கலாம். அல்லது
4. முரண்டு பிடித்து சுட்டுக் கொல்லப்படலாம்.

இவை யாவையும் இனப்படுகொலையின் முக்கிய குணாம்சங்கள். ஒரு பிரதேசம் வாழ் மக்களை அங்கிருந்து பலாத்காரமாக அல்லது சூழ்ச்சியின் துணை கொண்டு அப்புறப்படுத்துவது இனப்படுகொலையின் அம்சமாகும்.

இதற்கு என்ன செய்யலாம்? எமது கட்சி இவை யாவற்றையும் உணர்ந்தே அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்குத் தயாராகிக் கொண்டிருக்கின்றது. எமக்கு மக்களின் அனுசரணையும் ஆதரவும் கிடைத்தால் எமக்கு அதிகாரம் தானாகவே கிடைக்கும். அந்த அதிகாரம் எம்மை எம் மக்களின் ஈடேற்றத்திற்கு உழைக்க உதவும். அந்த அதிகாரம் எம்மை பிறநாட்டு அலுவலர்களுடன் எம் மக்கள் சார்பில் கலந்துறவாட வழி வகுக்கும். அந்த அதிகாரம் எமக்கு எதிராகச் செயற்படும் சக்திகளுக்கு எதிராகத் துணிந்து நிற்க உதவிபுரியும். அந்த அதிகாரம் எமது நாட்டுக்குக் கொடைகள் வழங்கும் கொடையாள நாடுகளுடன் பேச உதவும். எனவே தான் உங்களின் ஆதரவு ஒகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி வாக்களிப்பில் எங்களுக்கு வழங்குங்கள் என்று கோருகின்றோம்.- என்றார்.

# திவால் நிலையில் லெபனான் வறுமையில் சிக்கியது தேசம்

## உலக நாடுகளிடம் உதவி கோருகின்றது



ஊழல் காரணமாகவும் மக்களின் தொடர் போராட்டத்தினாலும் லெபனான் நாட்டில் மோசமான பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

லெபனான் நாட்டில் 25 சதவிகிதத்துக்கும் அதிகமானோருக்கு வேலை இல்லை. மூன்றில் ஒருவர் வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளனர். வங்கிகள் அனைத்தும் திவாலாகிவிட்டன. லெபனான் பவுண்ட் மதிப்பு வரலாறு காணாத வீழ்ச்சியை சந்தித்துள்ளது. பெரும்பாலான மக்கள் வீடு, உணவு, மின்சாரம், சுகாதாரம், கல்வி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் கூட இல்லாமல் வாழ்ந்து வருகின்றனர்.

கொரோனா நோய்த் தொற்று, ஆளும் அரசுக்கு எதிராகத் தொடர்ந்து நடைபெற்றுவரும் போராட்டம் ஆகியவை ஏற்கெனவே ஊசலாடிக்கொண்டிருந்த லெபனானின் பொருளாதாரத்தை மேலும் மோசமாக்கியிருக்கின்றன. பல நிறுவனங்கள் சம்பளம் கொடுக்க முடியாமல் பணியாளர்களைக் கொத்துக் கொத்தாக வெளியே அனுப்பிக் கொண்டிருக்கின்றன. இதனால், பசி பட்டினியால் மக்கள் மடியும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் தனியார் செய்திச் சேவை ஒன்றுக்குப் பேட்டியளித்த லெபனான் நாட்டின் வர்த்தகத்துறை அமைச்சர் ராவ்ல் நெக்மே, நாங்கள் இப்போது புயலுக்கு மத்தியில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். இதுவரை கண்டிராத நெருக்கடி நிலையை நாங்கள் சந்தித்துள்ளோம். நாட்டில் 50 வீதத்துக்கும் அதிகமானோர் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்கின்றனர். சரிவடைந்திருந்த லெபனானின் பொருளாதாரம் இப்போது தோல்வியுற்ற நிலையை அடைந்துவிட்டது. உலக நாடுகள் உதவிசெய்ய வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளார்.



## பிரேசிலில் தொற்று எண்ணிக்கை இருபது லட்சத்தைத் தாண்டியது

பிரேசிலில், ஒரே நாளில் 28 ஆயிரத்து 352 பேருக்கு புதிதாக கொரோனா தொற்று ஏற்பட்டதாக அந்த நாட்டின் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதனால், நாட்டின் மொத்த கொரோனாத் தொற்று எண்ணிக்கை 20 லட்சத்து 74 ஆயிரத்து 860 ஆக அதிகரித்துள்ளது. அதே போன்று கடந்த 24 மணி நேரத்தில் 921 பேர் கொரோனாவுக்கு பலியானனையால், இறப்பு எண்ணிக்கை 78ஆயிரத்து 722 ஆக உயர்ந்துள்ளது.

கொரோனாத் தொற்று எண்ணிக்கையில், அமெரிக்காவுக்கு அடுத்த இடத்தில் உலகில் 2 ஆவது நாடாக இருந்தாலும், பிரேசிலில் வர்த்தக நடவடிக்கைகளை மீண்டும் தொடக்குவதில் அரசு தீவிரமாக உள்ளது.

## முகக் கவசம் அணியுமாறு மக்களுக்கு உத்தரவிடமாட்டாராம் அதிபர் ட்ரம்ப்!

கொரோனா பரவலை கட்டுப்படுத்த முகக் கவசம் அணியுமாறு அமெரிக்கர்களுக்குத் தான் உத்தரவிடமாட்டார் என அதிபர் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.



அங்கு நோய்த்தொற்று தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில், அமெரிக்காவின் உயர்மட்ட தொற்று நோய் நிபுணரான டாக்டர் அந்தோனி ஃபாசி, பொது இடங்களில் முகக் கவசம் அணிவதை கட்டாயமாக்க வேண்டும் என மாகாண மற்றும் உள்ளூர் தலைவர்களிடம் வலியுறுத்தி உள்ளார். இதுதொடர்பாக பேசியுள்ள ட்ரம்ப், மக்களுக்கென குறிப்பிட்ட சுதந்திரம் இருக்க வேண்டும் எனவும், அனைவரும் முகக் கவசம் அணிந்தால் கொரோனா மறைந்துவிடும் என்ற கருத்துக்குத் தான் உடன்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

கொரோனா பரவ தொடங்கிய காலத்தில் இருந்து ஒரே ஒருமுறை மட்டுமே ட்ரம்ப் முகக் கவசம் அணிந்து பொதுவெளியில் வந்தமை குறிப்பிடத்தக்கது.

## இரண்டரைக் கோடி கக்களுக்கு ஈரானில் கொரோனாத் தொற்று!

### அதிபர் ஹசன் ரவுஹானி அதிர்ச்சித் தகவல்



ஈரானில் இரண்டரைக் கோடிப்பேருக்குகொரோனாத் தொற்று ஏற்பட்டது என தெரிவித்துள்ளஅதிபர்ஹசன் ரவுஹானி, மேலும் மூன்றரைக் கோடிப் பேருக்குத் தொற்று அபாயம் ஏற்படும் வாய்ப்பு உள்ளதாகக் கூறியுள்ளார்.

அரசு தொலைக்காட்சியில் ஆற்றிய உரையில் இதைத்தெரிவித்துள்ளஅவர், சுமார் 14,000 பேர் கொரோனாவுக்க பலியாகி விட்டனர் எனவும் அவர் தெரிவித்தார். இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் மருத்துவமனைகளில் கொரோனா தொற்றுக்காகசிகிச்சைபெற்று வருகின்றனர் என அவர் குறிப்பிட்டார். ஈரானின் மக்கள் தொகை எட்டு கோடியாக உள்ளது.

இதுவரை 2 லட்சத்து 69 ஆயிரத்து 440 பேருக்கு மட்டுமே வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளதாக ஈரானின் சுகாதார அமைச்சகம் அறிவித்துள்ள நிலையில் அதிபர் அதை விட பத்து மடங்கு அதிகமானஎண்ணிக்கையை அறிவித்திருப்பது குழப்பத்தை ஏற்படுத்தி உள்ளது.

## டெல்லியில் சுரங்கப்பாதையில் தண்ணீரில் மூழ்கி ஒருவரின் பலி

### திடீர் மழை வெள்ளத்தால் அனர்த்தம்



டெல்லியில் சுரங்கப்பாதையில் தண்ணீரில் மூழ்கிய ஒருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டது. டெல்லியில் இன்று அதிகாலை முதல் கனமழை பெய்து வருகிறது.

இதனால் பெருக்கெடுத்துப் பாயும் மழைநீரால் நகரின் தாழ்வான பகுதிகளில் தண்ணீர் தேங்கியுள்ளது. சாலைகளில் தண்ணீரில் தத்தளித்தபடி வாகனங்கள் சென்று வருகின்றன.

இந்நிலையில் புதுடெல்லி ரயில்வேயாட்டுஅருகேஉள்ளமின்டோசுரங்கப்பாதை முழுவதும் தண்ணீரில் மூழ்கியுள்ளது. அதில் அரசு பஸ்ஸும், ஒட்டோவும் மூழ்கியுள்ளனஎனத்தகவல்கிடைத்ததும்விரைந்து சென்ற தீயணைப்புப் படையினர் ஒட்டோ சாரதி, பஸ் சாரதி,நடத்துநர் ஆகியோரை ஏணியின் உதவியுடன் மீட்டனர்.

பஸ்மூழ்கிய அதே இடத்திலேயே 10 மணி அளவில் தண்ணீரில் ஒரு உடல் மிதந்துள்ளது. இதையறிந்த ரயில்வே பணியாளர் தண்ணீரில் நீந்திச் சென்று அந்த உடலை மீட்டுள்ளார். காலையில் சரக்கு வாகனம் ஒன்று அந்த இடத்தில் மூழ்கியதாகவும், அதை மீட்க முயன்றபோது தண்ணீரில் மூழ்கி சாரதி உயிரிழந்தார் எனவும் காவல் துறையினர் தெரிவித்துள்ளனர்.

# எரிபொருள் விலை அதிகரிப்பை எதிர்த்த இளைஞர்கள் மூவருக்கு மரண தண்டனை

## அதனால் ஈரானில் பொதுமக்கள் போராட்டம்





2019 ஆம் ஆண்டு, நவம்பர் மாதத்தில் எரிபொருள் விலையேற்றத்துக்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபட்டனர் என்று குற்றம் சாட்டப்பட்ட மூன்று பேருக்கு மரண தண்டனை விதித்துள்ளது அந்நாட்டு உச்ச நீதிமன்றம். இந்தத் தீர்ப்புக்கு எதிராகப் பொதுமக்கள் போராடத் தொடங்கியுள்ளமையால் ஈரான் அரசுக்கு நெருக்கடி ஏற்பட்டு உள்ளது.

ஈரான் நாட்டில் பொருளாதாரத் தேக்க நிலை நீடித்து வருகிறது. ஈரானின் பண மதிப்பு குறைந்து, பணவீக்கமும் அதிகரித்துள்ளது. அத்தியாவசியப் பொருள்களின் விலை பலமடங்கு அதிகமாகியுள்ளது. இந்த பொருளாதாரப் பிரச்னையைச் சரி செய்ய ஈரான் அரசு டீசல், பெட்ரோல் உள்ளிட்ட எரிபொருள்கள் விலையை ஐம்பது சதவிகிதம் வரை உயர்த்தியது. அதாவது இந்திய மதிப்பில் 18 ரூபாவுக்கு விற்ற பெட்ரோல் 27 ரூபாஆக விலை உயர்த்தப்பட்டது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து அந்நாட்டில் பல்லாயிரக் கணக்கானோர் போராட்டம் நடத்தினர். இந்தப் போராட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்டோர் இறந்தனர்.

போராட்டத்தைத் தீவிரமாக முன்னெடுத்து சென்ற அமிர் ஹுசைன் மொராடி, சயீத் டாம்ஜிடி மற்றும் மொஹம்மத் ராஜாபி ஆகிய மூன்று இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்கள் மீது தேசத்துக்கு எதிராகச் செயல்பட்டனர் எனக் குற்றம் சாட்டப்பட்டது.

இந்த வழக்கை விசாரித்து வந்த ஈரான் உச்ச நீதிமன்றம் அவர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றத்தை உறுதிப்படுத்தி, மரணதண்டனையை விதித்தது. மரணதண்டனையை எதிர்நோக்கியிருக்கும் மூன்று பேருக்கும் ஆதரவாக ஈரானில் மக்கள் போராடத் தொடங்கியுள்ளனர்.

மூன்று பேரையும் விடுவிக்கக்கோரி பொதுமக்கள் சமூக வலைத்தளங்களில் Stop Executions in Iran, Don't Execute என்று பல்வேறு ஹேஸ்டேக்களை டிரெண்டிங் செய்து வருகிறார்கள்.

எதிர்காலத்தில் ஈரான் அரசுக்கு எதிராக யாரும் போராட்டம் நடத்தக்கூடாது என்று கருதுகிறது. போராட வேண்டும் என்று நினைப்பவர்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தும் விதத்திலேயே அப்பாவி இளைஞர்கள் மூவருக்கும் மரணதண்டனை விதித்துள்ளது என்று பொதுமக்கள் பலரும் சமூக வலைத்தளங்களில் கண்டித்துள்ளனர்.

ஈரான் அரசுக்கு எதிராக அமெரிக்கா கடுமையான பொருளாதாரத் தடையை ஏற்படுத்தியிருக்கும் சூழலில், பொதுமக்களும் நேரடியாக மூன்று பேரின் மரண தண்டனைக்கு எதிராகப் போராடத் தொடங்கியுள்ளனர். இது ஈரான் அரசுக்கு கடும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

**பல்கலையில் பணியாற்றி ஓய்வு பெற்ற ஓய்வூதியர்களின் அவல நிலை குறித்து யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் 'பல்கலைக் கழக ஊழியர் சங்கம்' வெளியிட்ட பகிரங்க அறிக்கை இது.**

# பல்கலையில் பணியாற்றி ஓய்வு பெற்ற ஓய்வூதியர்களின் அவல நிலை!

பல்கலைக்கழக சமுகத்தின் அங்கமாக – பேராசிரியர்களாக, விரிவுரையாளர்களாக, கல்வி சாரா ஊழியர்களாக – இருந்து ஓய்வு பெற்ற பின் ஓய்வூதியம் பெறும் இந்த நாட்டின் சிரேஷ்ட பிரசைகளைப் பற்றி ஒரு முறையாவது நாம் யோசித்ததுண்டா?

44 வருடங்கள் விரிவுரையாளராகவும், அதில் 27வருடங்கள் பேராசிரியராகவும் கடமையாற்றி 2002இல் ஓய்வு பெற்ற பேராசிரியர் ஒருவரின் கதையைக் கேளுங்கள்: தனது ஓய்வூதிய நிதிக்காக ரூபாய் பன்னிரெண்டு லட்சம் ரூபாவை (ரூபா 12,00,000) 1999இல் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுக்கு செலுத்திய அவர் பெறும் ஓய்வூதியம் ரூபா 25,000 மட்டுமே!

37 வருட பல்கலைக்கழக சேவையில் 35 வருடங்கள் ஆய்வு கூட உதவியாளராக பணிபுரிந்து 2016இல் ஓய்வு பெற்ற ஊழியர் ஒருவர் பெறும் ஓய்வூதியம் ரூபா 18,000 மட்டுமே!

28வருட பல்கலைக்கழக சேவையில் பாதுகாப்பு சேவகராக பணி புரிந்து 2014இல் ஓய்வு பெற்ற ஊழியரின் ஓய்வூதியம் ரூபா 9,800 மட்டுமே!

35வருட பல்கலைக்கழக சேவையை நிறைவுசெய்து 2009இல் ஓய்வுபெற்ற காலஞ்சென்ற பல்கலைக்கழக பணியாளர் ஒருவரின் மனைவி விதவைகள் ஓய்வூதியமாக ரூபாய 3,700 மட்டுமே பெறுகின்றார்!





• இவர்கள் ஓய்வூதியர்கள் என்றபடியால், சொற்ப ஓய்வூதியத்தினைப் பெறுகின்றபோதும், இவர்களிற்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் உதவிகளோ, நிவாரணங்களோ வழங்கப்படுவதில்லை. அண்மையில் கொரோனாப் பெருந்தொற்றுக் காலப்பகுதியில் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட நிதியுதவிகளோ, நிவாரணங்களோ வழங்கப்படவில்லை.

• இவர்களால் அரச ஓய்வூதியர் சங்கத்தில் இணையமுடியவில்லை. அதற்கு அனுமதி மறுக்கப்படுகின்றது.

• இவர்களுக்கு பல்கலைக்கழகத்தினால் ஓய்வூதியர் அடையாள அட்டைகூட வழங்கப்படவில்லை. இதனால் இவர்கள், அரசாங்கத்தினால் ஓய்வூதியர்களுக்கு வழங்கப்படும் முன்னுரிமைகளையோ, சலுகைகளையோ பெறமுடியவில்லை.

### ஏன் இவர்களுக்கு இந்த அவலநிலை?

1999இல் தொடங்கப்பட்ட பல்கலைக்கழக ஓய்வூதியத் திட்டம் ஒருமுறை தானும் மீள் பரிசீலனை செய்யப்படவில்லை. ஆனால் மூன்று வருடங்களுக்கு ஒருமுறை மீளவும் பரிசீலிக்கப்படுமென்ற சுற்று நிருபத்தை நம்பியே ஓய்வூதியத்தில் இணைந்தவர்கள் இவர்கள். இணையும் போது தமது சேமலாபநிதிச் சேமிப்பிலிருந்து 40 வீதத்தை ஓய்வூதியத்துக்காய் வழங்கினர். ஓய்வு பெறும் வரை மாதா மாதம் சேமலாபநிதி சேமிப்பின் 8 வீதத்தை வழங்கினர்.

சென்ற நூற்றாண்டில் ஓய்வு பெற்ற அரசாங்க ஊழியர்களுக்கு 2016ஆம் ஆண்டின் சம்பள அடிப்படையில் ஓய்வூதியம் வழங்கப்பட, பல்கலைக்கழகத்தில் பணிபுரிந்த பேராசிரியர் தாம் ஓய்வு பெற்ற 2002ஆம் ஆண்டின் சம்பள அடிப்படையிலேயே இதுவரை ஓய்வூதியத்தை பெற்று வருகிறார்.

30 வருடங்கள் சேவையாற்றிய அரசாங்க ஊழியர் ஒருவர், 2016க்கு முன் ஓய்வு பெற்றிருந்தால் 2016ஆம் ஆண்டின் வேதன அடிப்படையிலும், அதற்கு பின் ஓய்வு பெற்றிருந்தால் ஓய்வு பெற்ற கால வேதன அடிப்படையின் 90 வீதத்தினையும் ஓய்வூதியமாகப் பெற, 2002இல் ஓய்வு பெற்ற பல்கலைக்கழக ஊழியர் ஒருவர் 60வயதில் 2002ஆம் ஆண்டின் சம்பள அடிப்படையில் 36 வீதத்தை மட்டுமே ஓய்வூதியமாகப் பெறுகிறார்.

அரசாங்க ஊழியரின் மரணத்துக்கு பின் அவர் மனைவி/பராயமடையாத பிள்ளைகள் அதே 90 வீதத்தைப் பெற, ஓய்வு பெற்ற பல்கலைக்கழக ஊழியரின் மரணத்துக்கு பின் அவரின் மனைவி/பராயமடையாத பிள்ளைகள் 18வீதத்தையே (36 வீதத்தின் அரைவாசி) பெறுகிறார்கள்.

ஓய்வு பெற்ற அரசாங்க ஊழியர்களுக்கு நடப்பாண்டின் வாழ்க்கை செலவுப் படியின் அரைவாசியும் ஓய்வூதியத்துடன் சேர்த்து வழங்கப்பட, பல்கலைக்கழக ஓய்வூதியர்களுக்கு இதுவும் கிடையாது.

அண்மைக்காலத்தில் ஓய்வு பெற்ற பல்கலைக்கழக ஆசிரியர்கள் பாக்கியசாலிகள். அவர்கள் கல்விசார் கொடுப்பனவு என்ற பெயரில் அடிப்படைச் சம்பளத்திற்கு மேலதிகமாக 115 வீதம் – 167 வீதம் வரை மேலதிக சம்பளமாக பெறுவதோடு அதுவும் ஓய்வூதியக் கொடுப்பனவு கணிப்பீட்டுக்குள் உள்வாங்கப்பட்டுள்ளது.

அண்மையில் ஓய்வு பெற்ற கல்விசாரா ஊழியரும் ஓரளவு பாக்கியவான்களே! அவர்களுக்கும் மேலதிக இழப்பீட்டு படியான (MCA) 45 வீதம் ஓய்வூதிய கணிப்பீட்டுக்குள் அடக்கப்படுகிறது

இதே போல் அண்மையில் ஓய்வு பெற்றவர்களுக்கு வாழ்க்கை செலவுப் படி (CLA) வழங்கப்படாவிட்டாலும் ஓய்வூதியக் கணிப்பீட்டுக்கு அந்தப் படி உள்ளடக்கப்படுகிறது.

ஆனால் நாங்கள் இங்கே கூறுவது தளர்ந்து போன முதியவர்களைப் பற்றி, பல பல்கலைக்கழகங்களின் ஆரம்ப கால ஆசிரியர்களையும் ஊழியர்களையும் பற்றி, காவோலைகளைப் பற்றி...

கொஞ்சம் கவனிப்பீர்களா? மக்கள் பிரதிநிதிகளாக வாக்கு கேட்டு வரும் பெரியவர்களே, இளைஞர்களே...

சில நிமிடங்கள் இவர்களை பற்றி சிந்திக்க முடியுமானால் மிக்க நன்றியுடையவர்களாவோம்.

**தொடர்புகளுக்கும் மேலதிக தகவல்களுக்கும்: திரு.இ.ஜெகதீசன், ஓய்வு பெற்ற பல்கலைக்கழக உள்ளக கணக்காய்வாளர்: 0212223843, 0775611950.**

# அடக்குமுறைகளைத் தடுத்து நிறுத்த கூட்டமைப்பினால் மட்டுமே முடியும்!

## மட்டு வேட்பாளர் உதயகுமார் கூறுகிறார்

தமிழ் மக்களுக்கெதிரான பேரினவாத அரச அடக்குமுறைகளை தடுத்து நிறுத்துவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் மாத்திரமே முடியும் என அக்கட்சியின் மட்டக்களப்பு வேட்பாளர் மாணிக்கம் உதயகுமார் தெரிவித்தார்.

மட்டக்களப்பு இருதயபுரம் பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற தேர்தல் பரப்புரை மக்கள் சந்திப்புகளில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு உதயகுமார் மேலும் தெரிவிக்கையில் –

தமிழ் மக்கள் அனைவரும் தங்களுக்கிடையிலான உள் முரண்பாடுகளைக் கைவிட்டு ஒற்றுமையுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு வாக்களித்து நாடாளுமன்றத்தில் தனித்துவத்தை நிலைநாட்ட வேண்டும்.

தற்போதைய அரசியல் களநிலைவரங்களையும் தமிழர்சார் அரசின் கொள்கைகளையும் ஒவ்வொரு தமிழரும் புரிந்துகொள்ளவேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

த.தே.கூட்டமைப்பு தவிர்ந்த கட்சிகள் மாயையான தோற்றப்பாடுகளை தமிழ் இளைஞர்கள் மத்தியில் தோற்றுவித்து அவர்களை ஏமாற்றப் பார்க்கிறார்கள். இந்த ஏமாற்று வித்தைகளை இளைய சமுதாயத்தினர் புரிந்து கொள்ள வேண்டும்.

தமிழர்களைச் சின்னாபின்னப்படுத்தும் இந்த உதிரிக் கட்சிகளுக்குத் தமிழ் மக்கள் அளிக்கின்ற வாக்குகள் ஒவ்வொன்றும் எமது பிரதிநிதித்துவத்தினைத் தாரை வார்ப்பதற்கான செயற்பாடாக அமையும்.

அதேநேரம் தமிழர்களுக்கு எதிராக அரசு மேற்கொள்கின்ற அடக்கு முறைகளுக்கு உறுதுணை அளிப்பதாகவும் அமையும். இதனை தமிழ் வாக்காளப் பெருமக்கள் அறிந்து செயற்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

எமது வேட்பாளர்களும் புத்திஜீவிகளும் பல முறை கூறியதனைப் போன்று த.தே.கூட்டமைப்பு தவிர்ந்த ஏனைய அனைத்துக் கட்சிகளுமே பேரினவாத அரசின் ஆசீர்வாதத்துடன் தமிழ் மக்களுக்கு எதிரான செயற்பாடுகளைத் தடையின்றி செயற்படுத்துவதற்கான ஆணையைப் பெறுவதற்காக களமிறக்கப்பட்ட கட்சிகளாகும்.

தமிழ் மக்களுக்காக குரல் கொடுக்கின்ற இளைஞர்கள், பொதுமக்கள், புத்திஜீவிகள், அரசியல்வாதிகள் ஆகியோரை மொட்டுக் கட்சி தலைவர்களின் வேண்டுதலுக்காக – அவர்களுடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்களுக்காக – படுகொலைசெய்தவர்கள் இப்போது மட்டுமென்ன தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வுக்காகவா ஒப்பந்தம் செய்திருப்பார்கள்?

மாறாக எஞ்சி இருக்கின்ற தமிழ் தேசியவாதிகளையும் எமது கட்சியான த.தே.கூட்டமைப்பினையும் இல்லாமல் செய்வதற்கும் தமிழர் தாயக நிலங்களை ஆக்கிரமிப்புச் செய்து சிங்கள, பௌத்த மேலாதிக்கத்தினை நாடு பூராகவும் மேலோங்கச் செய்வதற்காகவுமே உதிரிக் கட்சிகளின் தலைவர்களான பிள்ளையான், கருணா ஆகியோரும் மொட்டு அணியுடன்சேர்ந்துள்ள–தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு துரோகம் செய்து விட்டு வெளியேறிய – பிரமுகர்களும் ஒப்பந்தங்களைச் செய்துள்ளார்கள்.

எனவே எமது ஆணையினைக் கொண்டு எம்மையே அழிப்பதற்கான கபட நாடகத்தினை தற்போதைய பேரினவாத அரசு மேற்கொண்டுள்ளது. இதற்காக மூன்றாம் நிலை கடைக்கோடி உதிரிக் கட்சிகளான தங்களின் எடுபிடிகளை அரசு பயன்படுத்துகிறது.– எனக் குறிப்பிட்டார்.

# தந்தையைக் கொன்ற தனயன் கைதானார்

பல்லம களுகெலே பிரதேசத்தில் வீடொன்றில் இளைஞர் ஒருவரால் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு அவரது தந்தை கொலை செய்யப்பட்டுள்ளார். இருவருக்கும் இடையில் ஏற்பட்ட தகராறு நீண்டதில் மகனால் இந்த தாக்குதல் சம்பவம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த நபர் சிலாபம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார். 39 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் எனப்பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் சந்தேக நபரான மகன் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்

# சட்டத்துக்குப் புறம்பான சொத்துக்களை பறிமுதல் செய்வதற்கு புதிய பொலிஸ் பிரிவு

இலங்கையில் சட்டத்துக்குப் புறம்பான சொத்துக்கள் மற்றும் அறிவுசார் சொத்து விசாரணை பிரிவு என்ற புதிய பொலிஸ் பிரிவை நிறுவ பொலிஸ் திணைக்களம் முடிவு செய்துள்ளது.

இந்தப் புதிய பொலிஸ் பிரிவு தொடர்பாக சுற்றறிக்கை ஒன்றை பதில் பொலிஸ் மா அதிபர் சந்தனா விக்ரமரத்ன இன்று வெளியிட உள்ளார் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர், மூத்த பொலிஸ் அத்தியட்சகர் ஜாலியா சேனரத்ன தெரிவித்தார்.

இந்தப் புதிய பொலிஸ் பிரிவின் முக்கிய செயல்பாடுகளாக பயங்கரவாத அமைப்புகளுக்கு சொந்தமான சொத்துக்களை அடையாளம் கண்டு பறிமுதல் செய்வது, பணமோசடி மற்றும் போதைப்பொருள் கடத்தல் ஆகியவற்றிலிருந்து சம்பாதித்த பணம் மற்றும் அவற்றால் கிடைத்த சொத்துக்களைப் பறிமுதல் செய்வதாகும்.

குற்றவியல் விசாரணைப் பிரிவின் (சி.ஐ.டியின்) பொறுப்பான மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபரின் கீழ் இந்தப் புதிய பொலிஸ் பிரிவு அமைக்கப்பட உள்ளது.

# வவுனியா வைரவபுளியங்குளம் பகுதியில் வீதியில் இளைஞர் குழு அடிதடி ரகளை

## வீதியால் சென்றவர்கள் மீதும் தாக்குதல்; இருவர் காயம்

வவுனியா வைரவபுளியங்குளம் பகுதியில் இளைஞர் குழு ஒன்று வீதியில் அடிதடியில் ஈடுபட்டதுடன், கற்களினால் தாக்குதல்களும் மேற்கொண்டது. இதில் வீதியில் சென்றவர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று மாலை 6.40 மணியளவில் வவுனியா, வைரவபுளியங்குளம், எம்பயார் மதுபான விடுதி முன்பாக இடம்பெற்ற இச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது:-

வவுனியா, வைரவபுளியங்குளம், எம்பயார் மதுபான விடுதியில் மது அருந்திக் கொண்டிருந்த இளைஞர் குழு ஒன்றுக்குள் வாய்த்தர்க்கம் ஏற்பட்டு கைகலப்பாக மாறியது. இதனால் அந்த இளைஞர்கள் தமக்குள் அடிபட்டுக் கொண்டு வீதிக்கு வந்தனர்.

மதுபானசாலைக்கு முன்பாக வீதியில் குறித்த இளைஞர்கள் கைகலப்பில் ஈடுபட்டனர். கற்களை எடுத்தும் வீசி தாக்குதல் மேற்கொண்டனர். இதில் இருவர் காயமடைந்துள்ளனர். அத்துடன் வீதியில் சென்றவர்கள் மற்றும் வீதியில் நின்ற வாகனங்கள் மீதும் வீசப்பட்ட கற்கள் பட்டன எனவும் ஓட்டோ ஒன்று இதனால் சேதமடைந்துள்ளதாகவும் நேரில் பார்த்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து வவுனியா பொலிஸாருக்கு விடயம் தெரியப்படுத்தப்பட்டமையையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் இந்தச் சம்பவம் தொடர்பில் இரு இளைஞர்களைக் கைது செய்துள்ளமையுடன், ஏனைய இளைஞர்களைத் தேடி வருகின்றனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (உ - 100)

# சிறுபான்மையினர் ஒன்றிணைந்து செயற்பட்டால் மட்டும்தான் தீர்வு



கொழும்பு, ஜுலை 18

சிறுபான்மையின மக்கள் ஒன்றிணைந்து செயற்பட்டால்தான் தங்களின் இருப்பை பாதுகாத்துக்கொள்ள முடியுமென ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட வேட்பாளர் கலாநிதி வி.இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

கொட்டகலையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்தத் தேர்தல் பிரசார கூட்டத்தில் இராதாகிருஷ்ணன் மேலும் கூறியுள்ளவை வருமாறு:-

நடைபெறவுள்ள தேர்தல் சிறுபான்மையின மக்களுக்கு மிகவும் முக்கியமான தேர்தலாகும்.

மேலும் எமது இருப்பைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டுமெனின் சிறுபான்மையின மக்கள் ஒற்றுமையாகச் செயற்படவேண்டியது அவசியமாகும்.

அந்த வகையில் சஜித் பிரேமதாஸ தலைமையிலான அணிக்கு வாக்களித்தால் மாத்திரமே ஜனநாயகத்தைப் பாதுகாத்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

எனவே, தொலைபேசிக்கு வாக்களித்துவிட்டு தமிழ் முற்போக்கு கூட்டணியின் வேட்பாளர்களை ஆதரிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# அம்பாறைக்கு கருணா அம்மான் பாதுகாப்பு அரணாகத் திகழ்வார்

## முன்னாள் எம்.பி. சங்கர் கூறுகின்றார்



பலவழிகளால் பாதிக்கப்பட்டுள்ள அம்பாறை மாவட்ட தமிழ் மக்களைப் பாதுகாக்கும் முதுகெலும்புள்ள துணிவுள்ளபாரிய அரணாக கருணா அம்மான் விளங்குவார் என்பதில் ஐயமில்லை.

– இவ்வாறு அம்பாறை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் குணசேகரம் சங்கர், பொத்துவிலில் இடம்பெற்ற கூட்டத்தில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

கருணாவின் கட்சியின் பொத்துவில் தேர்தல் அலுவலகத் திறப்பு விழா வேட்பாளர் எஸ்.ரமணன் தலைமையில் நடைபெற்றது. அங்கு உரையாற்றும்போதே குணசேகரம் சங்கர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்தத் திறப்பு விழாவில் கருணாவும் கலந்துகொண்டிருந்தார். அங்கு முன்னாள் எம்.பி. சங்கர் மேலும் உரையாற்றுகையில்,

தமிழன் தன்மானவுள்ளவன். விதியற்ற தமிழன் கதியற்றுப் போனான் என்ற நிலையை மாற்றியமைத்து புதுவிதி செய்ய கருணா அம்மான் அம்பாறை வந்துள்ளார்.

அவரது வருகை அம்பாறையில் பாரிய புரட்சியை மாற்றத்தை உண்டு பண்ணி வருகின்றது என்பது மட்டும் உண்மையாகும். எதிரணியினர் வியந்து செய்வதறியாது திணறுகின்றனர்.

தமிழ் மக்கள் தன்மானத்தை இழக்காது அரசியல் தீர்வுடன் அபிவிருத்திப் பாதையில் பயணிப்பதே எமது இலட்சியமாகும். தீர்வு தீர்வு என்று காலத்தை கடத்தியதுதான் மிச்சம். ஒவ்வொரு 5 வருடங்களுக்கும் வந்து போகும் வேட்டிகளை இன்னும் நம்பினால் நாம் நடுக்கடலில் தத்தளிக்க வேண்டிவரும்.

அம்பாறை மாவட்டத்தில் இரவு வேளையில் உயரத்திலிருந்து பார்த்தால் எங்கெல்லாம் இருட்டாக இருக்கின்றதோ அவையெல்லாம் தமிழ்ப் பிரதேசங்கள் என்று அடித்துக் கூறலாம். இதுதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதுவரை காலமும் செய்த சேவை.

தமிழ் மக்களை விற்றுப்பிழைக்கும் கூட்டம் அது. மக்களைக் குட்டிச்சுவராக்கிவிட்டு தாங்கள் மட்டும் ராஜபோகம் அனுபவிக்கின்றனர்.

எந்தவொரு எம்.பி. வியாபாரம் செய்கின்றாரோ அவர் மக்களுக்குச் சேவை செய்யமாட்டார். ஏனெனில் அவருக்கு வியாபாரக் கணக்கில் இலாபம் - நட்டம் பார்க்கவே நேரம் போதுமானது - என்றார்.

# விலையுயர்வுக்கு எதிராக அட்டனில் போராட்டம்

'ஜெட்' வேகத்தில் உயர்வடைந்துள்ள பொருள்கள், சேவைகளின் விலையைக் குறைக்குமாறும், எரிபொருள் விலையிலும் மாற்றத்தை ஏற்படுத்துமாறு வலியுறுத்தியும் தேசிய மக்கள் சக்தி, மக்களோடு இணைந்து அட்டனில் இன்று போராட்டத்தில் ஈடுபட்டது.

அட்டன் மணிக்கூட்டு கோபுரத்திற்கு அருகில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி நடைபெற்ற இந்த போராட்டத்தில், தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களும் பங்கேற்றிருந்தனர்.

கொரோனா வைரஸ் உட்பட மேலும் பல பிரச்சினைகளால் மக்கள் வாழ்க்கையை கொண்டு நடத்த முடியாமல் திண்டாடுகின்றனர். இந்நிலையில் நிவாரணங்களை வழங்குவதற்கு பதிலாக மனிதநேயமற்ற இந்த அரசாங்கம் பொருள்களின் விலைகளைத் தொடர்ச்சியாக உயர்த்தி வருகின்றது. இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். உடன் குறைக்குமாறும் வலியுறுத்துகின்றோம்.

அதேபோல் உலக சந்தையின் எரிபொருள்களின் விலையும் கடந்தகாலத்தில் வரலாறு காணாதவகையில் வீழ்ச்சியடைந்தது. தற்போதும் குறைந்த மட்டத்திலேயே காணப்படுகின்றது. ஆனால், அரசாங்கம் எரிபொருள் விலையைக் கூடக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. எனவே, மக்கள் நலன் மறந்து செயற்படும் இந்த அரசாங்கத்துக்கு தக்க பாடம் புகட்டவேண்டும்."- என்று போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

'ஏமாற்று வேண்டாம்; உறுதியளித்த லீஸின் நிவாரணத்தை உடனே பெற்றுக்கொடு!' 'சமையலறைக்கு வரி அறவிடும் ஆட்சி எமக்கு வேண்டாம்' - என எழுதப்பட்டிருந்த பதாகைகளையும் ஏந்தியவாறு அரசாங்கத்துக்கு எதிராகப் போராட்டக்காரர்கள் அமைதியான முறையில் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

## தேர்தல் வன்முறைகளில்

# மஹிந்த கட்சிக்கு எதிராகவே அதிக முறைப்பாடுகள் பதிவு!

தேர்தல் வன்முறைகளில் ஈடுபட்டதாக ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணிக்கு எதிராகவே அதிகளவு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன எனத் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் வரை தமக்குக் கிடைத்த முறைப்பாடுகள் குறித்த விவரங்களை தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் வெளியிட்டுள்ளது.

அதற்கமைய ஸ்ரீலங்கா பொதுஜ முன்னணிக்கு எதிராக 259 முறைப்பாடுகளும், ஐக்கிய மக்கள் சக்திக்கு எதிராக 98 முறைப்பாடுகளும், ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக 38 முறைப்பாடுகளும், இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு எதிராக 20 முறைப்பாடுகளும், ஈ.பி.டி.பிக்கு எதிராக 12 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன.

சட்டவிரோத பிரசாரம் குறித்தே அதிக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன எனத் தெரிவித்துள்ள தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம், சட்டவிரோத சுவரொட்டிகள், பதாகைகள் குறித்தும் அதிக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன எனவும் சுட்டிக்காட்டியுள்ளது.

# கவனம்! மஞ்சளில் கலப்படம்!!

சமகாலத்தில் விற்பனை நிலையங்களில் விற்பனை செய்யப்படும் மஞ்சள் தூளில் பல்வேறு கலப்படங்கள் உள்ளன என்று பொது மக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



நுகர்வோர் பெற்று கொள்ளும் மஞ் சள் தூளில் பல்வேறு கலப்படங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனக் கிடைத்த தகவலுக்கமைய, விற்பனை நிலையங்களை திடீர் சோதனையிடும் நட வடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

அவ்வாறு வர்த்தக நிலையங்களில் கிடைத்த மஞ்சள் மாதிரிகள் பரிசோதனைக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என அதிகார சபையின் இயக்குனர் அசேல பண்டார தெரிவித்துள்ளார்.

நுகர்வோர் அதிகார சபையினால் மேற்கொள்ளப்படுகின்ற ஏனைய சுற்றிவளைப்புகள் பொதுவான முறையில் மேற்கொள்ளப்படுகின்றன எனக் குறிப்பிடப்படுகின்றது.

மோசடியான வர்த்தகர்கள் தொடர்பான தகவல் வழங்குவதற்காக நுகர்வோர் விவகார அதிகார சபையினால் தொலைபேசி இலக்கம் ஒன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. 1977 என்ற இலக்கத்தின் ஊடாக பொதுமக்கள் முறைப்பாடுகளை வழங்க முடியும்.

கொழும்பு யோன் வீதிக்கு அருகில் இடம் ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 50 லட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதியான மஞ்சள் கைப்பற்றப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அதிக விலையின் கீழ் இந்த மஞ்சளை விற்பனை செய்வதற்காக மறைத்துவைக்கப்பட்டிருந்ததாகத்தவன தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையில் அதிகளவானோர் உணவில் மஞ்சள் சேர்த்துக் கொள்வதனால் ஆபத்துக்கள் ஏற்படலாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# அமெ. ஒப்பந்தத்தை சாதாரணமாகவே நிராகரிக்கலாம்

அமெரிக்காவுடனான எம்.சி.சி ஒப்பந்தத்திலிருந்து விலகிக்கொள்ள மூன்றில் இரண்டுபங்கு பெரும்பான்மை அவசியமில்லை, சாதாரண பெரும்பான்மை போதும் என தேசிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட வேட்பாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இன்று நடைபெற்ற ஊடகச் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு மேலும் தெரிவித்த அவர், இந்த ஒப்பந்தத்தில் நல்லாட்சி அரசாங்கம் கைசாத்திட்டுள்ளதென்ற உண்மைக்கு புறம்பான தகவல்களை தற்போதைய அமைச்சர்கள் சிலர் கூறுகின்றனர் எனவும் சாடினார்.

இந்த ஒப்பந்தத்துக்காக இலங்கைக்கு அமெரிக்காவால் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் மிகவும் பாரதூரமானவை எனவும் தெரிவித்தார்.

# பௌத்த பாரம்பரியங்களைப் பாதுகாப்பது தொடர்பில் ராஜபக்ஷக்களின் அரசு மீதான நம்பிக்கை தகர்ந்தது

## சிங்கள பௌத்த அமைப்பு ஒன்று கவலை தெரிவிப்பு






ஜனாதிபதியாகவும் பிரதமராகவும் இருக்கும் ராஜபக்ஷ சகோதரர்கள் தலைமையிலான அரசாங்கம் பௌத்த பாரம்பரியங்களை பாதுகாக்கும் என மக்கள் வைத்த நம்பிக்கை சிதைந்து விட்டதாக, சிங்கள பௌத்த அமைப்பு ஒன்று கவலை தெரிவித்துள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் பௌத்த பாரம்பரியத்தை பாதுகாப்பதாக உறுதியளித்து, பிரசாரம் செய்த ஜனாதிபதி தற்போது அதற்கு நேரெதிராக செயற்படுகின்றமையை மக்கள் ஒருபோதும் எதிர்பார்க்கவில்லை என, ஜூலை 17ஆம் திகதி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில், ஹெல பொது சவிய அமைப்பு தெரிவித்துள்ளது.

வரலாற்று சிறப்புமிக்க நகரமான குருநாகலில், இரண்டாம் புவனேகபாகு ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட 700 ஆண்டுகள் பழமையான கட்டடம் இடிக்கப்பட்டுள்ளதாகவும், தற்போதைய பிரதமர் பிரதிநிதித்துவப்படுத்தும் மாவட்டத்தில் இது போன்ற சம்பவம் இடம்பெற்றுள்ளமை தொடர்பில் பொதுமக்கள் சந்தேகம் கொள்வது நியாயமானது எனவும் அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளது.

பொதுத் தேர்தல் நடைபெறவுள்ள இந்த நேரத்தில் தற்போதைய புத்த சாசன மற்றும் கலாச்சார அமைச்சரின் தேர்தல் மாவட்டத்தில் இதுபோன்ற விடயங்கள் இடம்பெறக்கூடாது. மேலும், தனது தொகுதியில் இத்தகைய மதிப்புமிக்க வரலாற்று தளங்களைப் பாதுகாக்க முடியாத ஒரு வேட்பாளர் எவ்வாறு வடக்கிலுள்ள முஹூது மகா விகாரை, தெவனகல மற்றும் குரகல இடிபாடுகளைப் பாதுகாக்க முடியும் என்பது தொடர்பில் பொது மக்களுக்கு நியாயமான சந்தேகம் காணப்படுகின்றது எனவும் அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீதியை அகலப்படுத்துவதற்காக, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் ஒப்புதலுடன் அந்தக் கட்டடத்தை இடித்ததாக, குருநாகல் நகர மேயர் துஷார சஞ்சீவ விதான ஒப்புக்கொண்டுள்ளார்.

கிழக்கு மாகாணத்தின் தொல்பொருள் பாரம்பரியமிக்க இடங்களை நிர்வகிக்க ஜனாதிபதி சமீபத்தில் ஒரு செயலணியை அமைத்துள்ளதோடு, அந்தக் குழுவில் ஒரே மதத்தைச் சேர்ந்த தலைவர்கள் மாத்திரம் உள்ளடக்கப்பட்டமைக்கு சிவில் சமூகத்தினர் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர்.

குருநாகல் மாவட்டத்தில் பாதுகாக்கப்பட வேண்டிய, 10 கட்டடங்களில் ஒன்றான இரண்டாம் புவனேகபாகு மன்னரின் அரச சபை கட்டடத்தை நகர அபிவிருத்தி அதிகார சபையும், தொல்பொருள் துறையும் நகர அபிவிருத்தி என்ற போர்வையில், தகர்த்துள்ளன என அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொல்பொருள் இடங்கள் பாதுகாக்கப்பட வேண்டிய நேரத்தில் இத்தகைய மதிப்புமிக்க தளங்கள் யாருடைய செல்வாக்கின் கீழ் தகர்க்கப்படுகின்றன என ஹெல பொது சவிய அமைப்பின் தலைவர் புதுகல ஜினவன்ச தேரர் தனது கடிதத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்தச் சம்பவத்தின் பின்னணியில் உள்ள அரசியல் சக்திகள் குறித்த விசாரணையை விரைவுபடுத்தவும், எதிர்கால தலைமுறையினருக்காக வரலாற்று முக்கியத்துவத்தை பாதுகாக்கும் வகையில், குறித்த கட்டடத்தை அதே இடத்தில் மீண்டும் நிர்மாணிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும், அவ்வாறு ஜனாதிபதி செயற்படாத பட்சத்தில் தேர்தலில் ஜனாதிபதியை அதிகாரத்திற்கு கொண்டு வர செயற்பட்ட மக்களுக்கு இழைக்கப்படும் அகௌரவமாக அது அமையுமெனவும் புதுகல ஜினவன்ச தேரர் குறிப்பிபிட்டுள்ளார்.

வரலாற்று சிறப்புமிக்க குருநாகல் இராசதானியின் அரண்மனையின் பாதுகாப்பை உறுதி செய்ய தொல்பொருள் ஆணையாளர் மற்றும் பொலிஸ் மா அதிபருக்கு அறிவுறுத்தப்பட்ட போதிலும், இவ்வாறு தகர்க்கப்பட்டமை ஒரு குழப்பமான நிலையை தோற்றுவித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இரண்டாம் புவனேகபாகு மன்னரின் அரசவையை தகர்த்தமை தொடர்பில், பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள போதிலும், பொலிஸார் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை என தொல்பொருள் ஆணையாளர் பேராசிரியர் செனரத் திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

## கடற்படையைச் சேர்ந்த ஐவர் மட்டும் சிகிச்சையில்

### 901 பேர் குணமடைவு

கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட 05 கடற்படை சிப்பாய்கள் மாத்திரம் தற்போது வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அதற்கமைய, கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டு குணமடைந்த கடற்படை சிப்பாய்களின் எண்ணிக்கை 901ஆக உயர்வடைந்துள்ளது.

கொரோனாத் தொற்றுக் காரணமாக வைத்தியசாலைகளில் மொத்தமாக 906 கடற்படையினர் சேர்க்கப்பட்டிருந்தனர்.

901 கடற்படை சிப்பாய்கள் குணமடைந்து வைத்தியசாலைகளிலிருந்து வெளியேறியுள்ள போதிலும், சுகாதார ஆலோசனைகளுக்கு அமைய, மேலும் 14 நாள்களுக்கு அவர்கள் தனிமைப்படுத்தலுக்கும் உட்படுத்தப்பட்டனர்.

## தேர்தல்கள் ஆணைக்குழுவில் கொரோனா மத்திய நிலையம்

தேர்தல்கள் ஆணைக்குழுவில் கொரோனா மத்திய நிலையமொன்று செயற்படவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதில் சுகாதார பிரிவின் அதிகாரிகள், மருத்துவர்கள், அரசியல் கட்சி பிரமுகர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் அனைவரையும் பங்களிப்புச் செய்வதற்கு எதிர்பார்ப்பதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

இந்த மத்திய நிலையம் நாளை தொடக்கம் செயற்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

2020 பொதுத் தேர்தல் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதி இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கல்லடியில் சுவாமி விபுலானந்தரின் சிரார்த்த தின நினைவு அனுஷ்டிப்பு

மட்டக்களப்பு, ஜூலை 19

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தரின் 73ஆவது சிரார்த்த தினத்தை முன்னிட்டு, மட்டக்களப்பு கல்லடியில் அமைந்துள்ள அன்னாரது சமாதிக்கு மலரஞ்சலி செலுத்தும் நிகழ்வும், மட்டக்களப்பு திருநீற்றுப் பூங்காவில் அமைந்துள்ள சிலைக்கு மாலை அணிவிக்கும் நிகழ்வும் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றன.

மட்டக்களப்பு கல்லடியில் நடைபெற்ற நிகழ்வு சுவாமி விபுலானந்தர் சிவானந்தா நூற்றாண்டு விழாச் சபையின் ஏற்பாட்டில் இடம்பெற்றது. இந்நிகழ்வில், கல்லடி இராமகிருஷ்ணமின் சுவாமி தட்சயானந்தா, சுவாமி நீலமாதவானந்தா போன்றோர் கலந்துகொண்டு விடே பூசைகள் நடத்தி அஞ்சலி செலுத்தினர்.

இதில் நூற்றாண்டு சபையின் தலைவர் கே. பாஸ்கரன் மற்றும் சபையின் உறுப்பினர்கள், கல்விமான்கள், மாணவர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது பாடசாலை மாணவிகளால் சுவாமி விபுலானந்தரின் 'வெள்ளை நிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ' எனும் பாடலும் பாடப்பட்டது.

தொடர்ந்து மட்டக்களப்பு திருநீற்றுப் பூங்காவில் அமைந்துள்ள சுவாமி விபுலானந்தரின் சிலைக்கு மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தும் நிகழ்வு மட்டக்களப்பு மாநகர சபை முதல்வர் தி. சரவணபவன் தலைமையில் இடம்பெற்றது.





## முட்டையின் விலை மேலும் அதிகரிக்கும்

எதிர்வரும் நாள்களில் கோழி முட்டையின் விலை மேலும் அதிகரிக்கும் என இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளளது.



கோழி தீவனத்திற்கு ஏற்பட்டுள்ள பற்றாக்குறை காரணமாக இந்தநிலைஏற்பட்டுள்ளதாக சங்கத்தின் செயலாளர் சுபசிங்க தெரிவித்துள்ளார்.

கோழி தீவனத்திற்கு சோளத்தின் அவசியம் ஏற்பட்டுள்ளது. அதற்காக அரசாங்கத்தின் மாற்றுஉணவாக கோதுமை விதைகள் ஒரு லட்சத்து 80 ஆயிரம் மெட்ரிக் தொன் இறக்குமதி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

எனினும் கோதுமை விதைகள் கோழித் தீவனத்திற்கு மாற்ற வழியல்ல. இதுவரையில் வேறு உணவு வகைகளை வழங்குவதனால் பாரிய நட்டத்தை ஏற்க நேரிட்டுள்ளது.

நட்டமின்றி கோழி முட்டையை விற்பனை செய்ய வேண்டுமாயின் அதன் விலையை 20 ரூபா வரையில் அதிகரிக்க வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கோழி தீவனத்தின் பற்றாக்குறை காரணமாக கோழி இறைச்சியின் விலையும் அதிகரிக்கவுள்ளதாக தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.07.2020 இல் வெளியிடப்பெற்றது.